சுருக்கம்

வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கும் திட்டம் – சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைத்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

தகவல் தொழில்நுட்பவியல் (மிஆ–2) துறை

**அரசாணை (வாலாயம்) எண். 62** நாள்: 22-06-2006

படிக்க :

அரசாணை (நிலை) எண். 3 , தகவல் தொழில்நுட்பவியல் துறை
நாள்: 20-06-2006

***

**ஆணை :**

மகளிருக்கு பொழுது போக்கிற்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும் வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அவை இல்லாத குடும்பங்களுக்கு வழங்க இந்த அரசு கருதியுள்ளது.

2. பார்வையில் கண்ட அரசாணையில் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குதல் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள், மேற்படி திட்டம் தொடர்பாக, கீழ்க்கண்டவற்றை பரிசீலித்து ஆலோசனை வழங்கும் பொருட்டு சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(1) பயனாளிகள் தேர்விற்கான நெறிமுறைகள்
(2) தொலைக்காட்சிப் பெட்டிக்கான விவரக்குறியீடு
(3) ஒப்பந்தப்புள்ளி வரைவு ஆவணம்
(4) டெண்டர் டிரான்ஸ்பரன்சி சட்டப்படி கொள்முதலுக்கு பின்பற்றப்படும் செயல்முறைகள்
(5) தொலைக்காட்சிப் பெட்டி விநியோகம்
(6) திட்ட அமலாக்கம்
(7) 2006ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இத்திட்டத்தைத் துவங்குவது.

3. இந்த குழுவில் இடம் பெறுவதற்கு சட்டமன்ற கட்சிகளின் சார்பில் சட்டபேரவை உறுப்பினர் ஒருவர் பெயரை அனுப்பிவைக்கும்படி சட்டமன்றக்கட்சி தலைவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் ஆகியவற்றின் சட்டமன்ற கட்சித் தலைவர்கள் தங்களது கட்சிகளின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் எவரும் மேற்படி குழுவில் இடம் பெற விரும்பவில்லை என தெரிவித்துள்ளார்கள். தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் மேற்படி குழுவில் இடம்பெற இயலாத நிலையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

4. சட்டமன்றக் கட்சித்தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் தொடர்பாக கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை அரசு அமைக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| 2. | திரு மு.க.ஸ்டாலின்,<br>அமைச்சர் (உள்ளாட்சி)<br>திராவிட முன்னேற்றக் கழகம் | உறுப்பினர் |
| 3. | திரு டி. சுதர்சனம்,<br>சட்டமன்ற கட்சித் தலைவர்<br>இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி | உறுப்பினர் |
| 4. | திரு ஜி.கே. மணி,<br>சட்டமன்ற கட்சித் தலைவர்<br>பாட்டாளி மக்கள் கட்சி | உறுப்பினர் |
| 5. | திரு வை. சிவபுண்ணியம்,<br>சட்டமன்றக் கட்சித் தலைவர்<br>இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | உறுப்பினர் |
| 6. | திரு சி. கோவிந்தசாமி,<br>சட்டமன்ற கட்சித் தலைவர்<br>இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) | உறுப்பினர் |
| 7. | திரு எச். அப்துல் பாசித்,<br>சட்டமன்ற உறுப்பினர்<br>இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி | உறுப்பினர் |
| 8. | திரு மு. ஜெகன் மூர்த்தி,<br>சட்டமன்ற கட்சித் தலைவர்<br>புரட்சி பாரதம் | உறுப்பினர் |
| 9. | திரு கு. செல்வம்,<br>சட்டமன்ற கட்சித் தலைவர்<br>விடுதலை சிறுத்தைகள் கட்சி | உறுப்பினர் |

5. இக்குழு தேவைக்கேற்ப, அவ்வப்போது கூடி திட்டம் தொடர்பான தம்முடைய ஆலோசனைகளை வழங்கும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி,
தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதலமைச்சரின் செயலாளர், சென்னை 9
அமைச்சர் (உள்ளாட்சி) துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9
சட்டமன்ற கட்சி தலைவர்கள்,
திராவிட முன்னேற்றக் கழகம்/
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்/
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி /
பாட்டாளி மக்கள் கட்சி/ மறுமலர்ச்சி திராவிட முன்னற்ற கழகம்/
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி/இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்)/
இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி/புரட்சி பாரதம் கட்சி/
விடுதலை சிறுத்தைகள் கட்சி
அரசு செயலாளர், நிதி/ வருவாய்/ ஊரக வளர்ச்சி/நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை 9
சிறப்பு ஆணையர், வருவாய் நிர்வாகத் துறை, சென்னை 5
நகல்:
தலைமைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை 9
தகவல் தொழில் நுட்பவியல் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை 9
இ.கோ/உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்